Regd. No. M. 4593. 'KUDI ARASU' 12பக்கங்கள்

குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5 சனி வெளியீடு.

புத்தகம் 18 } தாரண, 10-3-1945 மாசி-மீ 27உ. } மலர் 22

யாகத்தின் ரகசியம்

ஓர் சம்பாஷணை

சங்கரன்:—ஏது நண்பனே, இன்று அவசரமாய்ச் செல்கின்றாய். வீடு பிடித்துவிட்டதோ?

கிருஷ்ணன்:— அப்படியில்லை, நாளையதினம் எங்கள் கிராமத்தில் ஓர் யாகம் நடக்கப்போகிறது. இன்று மாலையிலேயே ஆரம்பம், அதற்காகப் போகிறேன்.

சங்—யாகம் என்றால் எனக்கு புரியவில்லை அதை எப்படிச் செய்வார்கள்?

கிரு—அதை எல்லாம் உனக்குச்சொல்வது கூடாது, அந்தரங்கமானது; அது யெங்கள் பரம்பரை பரம்பரை வழக்கமாயுள்ளது; யாகம் செய்தால் ஊர் செழிக்கும், பிராமணர்களுக்குச் செல்வம் வளரும்.

சங்—நண்ப, எவ்வளவு அந்தரங்கமானாலும் பலர் சேர்ந்து செய்தால் எப்படியும் வெளிவந்துதானே தீரும். அன்றியும் நீ சொல்வதைப்பார்த்தால் நல்ல காரியமாகத்தானே தெரிகிறது. அதை நான் தெரியும்படி சொல்ல வேண்டுகிறேன்.

கிரு—அது என்னைச் சீக்கிரம் போக விடமாட்டாய் போலிருக்கிறது. எனக்கு முக்கிய நண்பனானதால் சுருக்கமாகக் கூறுகிறேன். மற்றவர்களிடம் சொல்லாதே.

சங்—அப்படியே.

கிரு—எங்களூர் சிவன் கோவிலின் வடபாகத்தில் யாககுண்டம் வெட்டிப் பந்தலிட்டு அதற்குவேண்டிய சமித்துக்கள், நெய், பால், தயிர், தானியம், தேங்காய், பழம் முதலிய சாமான்கள் தருவித்து அயலூர்களிலுள்ள சாஸ்திரியார்கள், கனபாடிகள், சடாவல்லவர்கள், தீட்சதர்கள் முதலியோரை யெல்லாம் வருவித்து யாகத்தை முடித்துத் தேவர்களுக்கு அவிர்ப்பாகம் கொடுத்து பிராமண போஜனம் செய்து முடிப்பார்கள்.

சங்—நண்ப இவ்வளவு அவசரமாகச் சொல்லிவிட்டால் நான் தெரிந்து கொள்ள வேண்டாமா? உபாத்தியாயர்கள் என்றாலே நம்முடைய பள்ளிக்கூட உபாத்தியாயர்களெல்லாம் வருவார்களா?

கிரு—அட மூடமே, இதுகூடத் தெரியாதா? இந்த உபாத்தியாயர்களுக்கு அங்கென்ன வேலை? வேத அத்யயனம் செய்த உபாத்தியாயர்களாகிய வைதீகர்களாக்கும்.

சங்—அந்த உபாத்தியாயர்களைக் கொண்டு நம் பள்ளிக்கூடத்தில் அவ்வேதத்தைக் கற்றுக்கொடுக்கும்படி செய்தால் இந்த விஷயங்களெல்லாம் எங்களுக்கும் தெரிய வழியிருக்குமே?

கிரு—நீ என்ன பைத்தியகாரனாயிருக்கிறாயே! நீங்களெல்லாம் அவ்வேதத்தைக் காதாலும் கேட்கப்படாதாம். அப்படியானால் பிராமண தர்மம் கெட்டுவிடுமாம்; உதாரணமாகக் கல்லிடைக்குறிச்சி சமஸ்கிருத பாடசாலையைத் தாலூக்கா போர்டார் ஏற்று நடத்தும்போது உங்களவர்களைச் சேர்க்கும்படிசெய்ய, அவர்களுக்கு எங்கள் உபாத்தியாயர்கள் கற்றுக்கொடுக்க மறுத்துவிட்டதால் அப்பாடசாலையை போர்டு நிர்வாகத்திலிருந்து நீக்கிவிட்டார்கள்.

சங்— ஐயோ! அப்படிப்பட்ட வேதமொன்றிருக்கிறதா? அதில் அப்படிச் சொல்லியிருக்குமா? அதை யார் செய்தது?

கிரு—அது கடவுள் பிராமணர்களுக்காகச் செய்து கொடுத்தாராம், அவர்களே கற்று அதன்படி காரியங்களை அவர்களே செய்யவேண்டும், மற்றவர்கள் கேட்டாலும் பார்த்தாலும் கற்றாலும் தண்டனையுண்டு.

சங்— படிப்புக்குத் தண்டனையா! வெகு அழகு! உண்மையான கடவுள் இப் பாஷையைச் செய்திருக்கமாட்டார், அப்படிச் செய்திருந்தால் எல்லோருக்கும் பொதுவாகவிருக்கும். உலக பாஷைகள் சகலருக்கெல்லாம் பொதுவாகும். இது தன்னலம் போற்றும் பிராமணக் கடவுள்தான் செய்திருப்பார். அவருக்குக் கடவுள் பட்டம் தகுதியன்று.

கிரு— உனக்கென்னடா தெரியும், அப்பாஷை தேவ பாஷையாக்கும். சாதாரண மனிதர்கள் அறியப்படாதென்றும் அது அவ்வேதத்திலேயே சொல்லியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

சங்—தண்டனையுண்டென்றாயே, இதற்கு முன் அப்படி எங்கேயாவது நடந்திருக்கிறதா?

கிரு—இக்காலந்தான் ஆங்கில அரசாட்சியாய்ப் போய்ச்சே! அக்காலத்து ஆரிய அரசர்களாகிய மனு, மந்தாதா, தசரதன், இராமன், தருமர், முதலியவர்கள் ஆட்சியானால் நீ இதைப் பற்றி இவ்வளவு பேசினதற்கே நீ படும்பாடு வேறாகும்.

சங்— அம்மம்மா! அவ்வநியாய அரசர்கள் வேண்டாமப்பா! யாகத்தைப்பற்றி இன்னும் கொஞ்சம் விவரிக்கவேண்டும்.

கிரு—சீக்கிரம் போகவேண்டும், கேட்பதை சுருக்கமாகவே கேள்.

சங்—நண்ப இந்த யாகம் எதற்காக யாரை உத்தேசித்தது?

கிரு—உலக க்ஷேமத்துக்கும், பிராமண அபிவிருத்திக்கும் இந்திரனை உத்தேசித்து செய்வது.

சங்—இந்திரன் வருவானா? மந்திரம் செய்பவர்களாவது காணுவார்களா?

கிரு—அது முடியாது. அவனுக்குரிய மந்திரத்தால் வழுத்து மந்திர பூர்வமாய் ஆகுதி செய்து அவிர்ப்பாகம் கொடுப்பதை அவன் ஏற்றுத் திருப்தியடைவானென்பது வேதாந்தம்.

சங்—இந்திரனுக்கு எதை எப்படி ஆகுதி செய்து அவிர்ப்பாகம் கொடுப்பது.

கிரு—உன்னிடம் நான் சிக்கிக் கொண்டேன்-இதற்குமேல் சொன்னால் என்னை என்னவும் செய்தாலும் செய்வாய்

சங்—நண்ப உன் கூட்டத்தார் செய்கைக்கு உன்னை எவனுஞ் செய்வதுண்டாயிருக்குமா? விஷயம் தெரிய கேட்கிறேன்.

கிரு— இப்போ சொல்லப் போகிற விஷயத்தில் எனக்கும் ஒருவிதத்தில் அதிருப்தி தான்-வைதீகர்கள் காரியம்-அதை உனக்கும் தெரிவித்துவிடுகிறேன், அதாவது யாக குண்டத்தில்

பலவித சமித்துக்களையிட்டு ஆவின் நெய் சொரிந்து எரித்து தானிய வகைகள், பஞ்ச கவ்வியங்கள், பழந்தேங்காய், பட்டு முதலியவைகளைப் போட்டு கடைசியாய் கொழுத்த ஆட்டை தீட்சதரென்பவர் குரல்வளையை நெருக்கி உயிரைப் போக்கி அதை அறுத்து வபை என்னும் இரத்தாசயத்தை எடுத்து மந்திரஞ் சொல்லி ஓம குண்டத்தில் அவிர்ப்பாகம் கொடுப்பார். இதுதான் யாகம்-இதன் ரகசியம் தெரிந்ததா?

சு—சிவசிவா, தெரிந்துகொண்டேன்-ஆட்டின் மாமிசத்தை யென்னசெய்வார்கள்?

சி—அதைக் கேளாதே, சொல்லத் தயாரில்லை. நீயேயூகித்துக்கொள்-அது பலவிதம்-

சு—நண்ப, இதுவிஷயத்தைப் பலர் பலவிதமாகப் பேசினர். அதனுண்மை தெரியவே உன்னைக் கேட்டுத் தெரிந்தேன். நீயும் பலவிடங்களில் புதையல் செய்துவிட்டுச் சிறிது தெரிவித்தாய்-ஆகிலும் சில வார்த்தைகள் சொல்லிய பின் போகக்கடவாய்.

தமிழ்வேதமென்னும் திருக்குறளில் உங்கள் விஷயங்களைக் கண்டித்துத் தமிழ் மகனாகிய தெய்வப் புலமை திருவள்ளுவர் கூறுவதைக் கேள்.

'அவிசொரிந்தாயிரம் வேட்டலி
னொன்றனுயிர் செகுத்துண்ணாமை
நன்று'

'நன்றாகுமாக்கம் பெரிதெனினுஞ்
சான்றோர்க்குக் கொன்றாகு
மாக்கங்கடை'

'உயிருடம்பினீக்கியாரென்பர்
செயிருடம்பிற் செல்லாத் தீ
வாழ்க்கையவர்'

'அறவினையாதெனிற் கொல்லாமை,
கோறல் பிறவினையெல்லாந்தரும்.'

என்ற முதுமொழியின் கருத்தைக் கண்டனையோ? இப்படிப்பட்ட ஆபாசமான யாகங்கள் சிறு தெய்வ வழிபாடுகள் கூறுங்கூற்றுக்களைத் தமிழ் மக்கள் கற்றால் உமது நூல்களைக் கையால் தொடவும் விரும்புவரோ! இதற்காகத்தான் வேதத்தைப் பார்ப்பனர் தவிர மற்றவர்கள் படிக்கொணாதென்ற கட்டுப்பாடு போலும்- நண்பனே, நீ அந்த அநியாயமான கொலைக்களத்திற்குப் போகாதே.

சி—நண்ப, உன் போதனை கேட்டதும் அங்கியம் போகவேணுமென்ற ஈர்ப்பு என்னை விட்டு நீங்குகின்றது-உனக்கு ஒன்றுந்தெரியாதென்றும் உன்னவர்களுக்கு சாஸ்திரங்கள் கிடையாதென்றும் எங்களவர்கள் சொல்லுவதைக் கேட்டு மயங்கினேன்—உங்களுக்குரியதெனக் கொண்டிருக்கும் தமிழ் வேதத்தின் ஆழ்ந்த நோக்கின் பெருமையை இந்நான்கு செய்யுட்களையே கண்டு கொண்டேன்-உன்னோடு பேசியதன் பயனாய் அவ்விடத்திற்குப் போக அருவருப்பாயிருக்கின்றது-மற்றவை நாளைப் பேசுவோம். வந்தனம்.

திராவிட நாட்டுச் செய்திகள்

31-12-44-ந் தேதி தோழர் எஸ். டி. சபரிநாதன் தலைமையில் நடைபெற்ற பம்பாய் தமிழ் நாடு பகுத்தறிவு நிலையத்தின் மாதாந்திரக் கூட்டத்தில் தோழர்கள் பி. டி. நாயகம், ஆம்பூர் டி. மாணிக்கம், கருங்குளம் எஸ். டி. எஸ். ஆறுமுகம் அம்மையார் முதலானவர்கள் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. டை நிலையத்திற்கு புது நிருவாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

• •

தாராவி அரசர்குளம் பொருளாதார கழகக் கூட்டம் தோழர் ஆ. சண்முகமேஸ்திரியார் தலைமையில் 14-1-45-ந் தேதி நடைபெற்றது. கழக நிதி இருப்பு ரூ. 75-2-0 என அறிவிக்கப்பட்டது.

• •

பம்பாய் திராவிடர் தமிழ் நூல் நிலையத்தின் சார்பாக தோழர் இளங்கோவடிகள் தலைமையில் தாராவியில் 15-1-45-ந் தேதி கொண்டாடப்பட்டது.

• •

பம்பாய் நான்குநேரி தாலுகா ஆதி திராவிட மகாஜன சங்கத்தின் மாதாந்திர பொதுக் கூட்டம் 21-1-45-ந் தேதி தோழர் பி. சதானந்தம் தலைமையில் நடைபெற்றது. கொழும்பு சங்கத்தின் முயற்சியால் ஏழைகளின் கல்வி நலனுக்காக சாகிப் பகதூர் எஸ். மீராசாகிப் அளித்த நன்கொடை ரூ. 2000க்கு நன்றி செலுத்தப்பட்டது.

• •

பம்பாய் தாராவி தமிழ்நாடு பகுத்தறிவு நிலையத்தின் முதல் ஆண்டு நிறைவுவிழா 28-1-45-ல் தோழர் எம். ஜீ. பேக்கே தலைமையில் நடைபெற்றது. பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற தோழர்கள் ஆர். என். சிவன், எஸ். பி. சுந்தரவேல் ஆகியவர்களுக்கு முதல் பரிசும் இரண்டாம் பரிசும், அதிக அங்கத்தினர்களைச் சேர்த்த தோழர் எஸ். பெரியசாமிக்கு ஒரு பரிசும் வழங்கப்பட்டது.

• •

பம்பாய் திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் 2-வது ஆண்டு 1-வது மாதாந்திரக்கூட்டம் 25-2-45ந்தேதி தோழர் எஸ். டி. சபரிநாதன் தலைமையில் நடைபெற்றது.

• •

பம்பாய், தாராவி திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் நிர்வாக உறுப்பினர் தோழர் ஆர். எஸ். ஆறுமுக நயினார், பம்பாய் இஞ்சினியரிங் சப்ளை டிப்பார்ட்மெண்டிலிருந்து மத்திய மாகாணத்திலுள்ள மேற்படி கம்பெனிக்கு மாற்றப்போவதை முன்னிட்டு 1-2-45-ந் தேதி எ. எஸ். சுப்பு அண்டு பிரதர்ஸ் கடையில் தோழர் எஸ். டி. சபரிநாதன் தலைமையில் ஒரு பிரிவுபசாரம் நடந்தது.

• •

பம்பாய் தோழர் வி. என். மால்துரைகளின் ஒருவிருட ஆண்குழந்தைக்கு அன்பழகன் என்று பெயரிட்டதின் நினைவாக 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

• •

கொழும்பு டி. ஜீ. மாணிக்கமனது ஆ. தி. வா. அபிவிருத்தி சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் 6-1-45-ந் தேதி தோழர் என். எஸ். ஆசீவார் தலைமையில் நடந்தது. கோவில்பட்டி தாலுகாவிலுள்ள கிராம ஸ்தாபனங்களை ஒன்று திரட்டி கொழும்பில் தாலுகா சங்கம் நிறுவுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

• •

திருப்பணிக் கரிசல்குளம் பெற்றோர் சங்கம் பொதுக் கூட்டம் கீழூர் பாடசாலை மைதானத்தில் 15-1-45-ல் தோழர் எம். பி. மந்திரம் தலைமையில் நடைபெற்றது.

• •

கொழும்பு, புறக்கோட்டை, வாழைத் தோட்டம் ரோடு 32/20 என்ற எண்ணுள்ள கட்டிடத்தில் பகுத்தறிவு நூல் நிலையம் ஒன்று தோழர் பெ. ம. சாந்து அவர்களால் 4-2-45-ல் திறந்து வைக்கப்பட்டது.

• •

திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட லீக் (இலங்கை) இன் காரியக்கமிட்டிக் கூட்டம் கொழும்பு டேம்வீதி 194 நெ. இல்லத்தில் 21-1-45-ல் தோழர் டி. எஸ். பீட்டர் தலைமையில் நடைபெற்றது. 1945 வருடத்திற்கு நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். 13-4-44-ந் தேதி டவுன் ஹாலில் நடந்த கச்சேரியின் வரவு செலவு கணக்கை ஒப்புவிக்காத தோழர் எஸ். டேவிட் ஜோசப்மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமெனவும் தோழர் பி. எஸ். எம். பொம்மையாவின் ராஜிநாமா ஒப்புக்கொள்ளதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 'குடி அரசு'க்கு ரூ. 5 நன்கொடையளிக்கப்பட்டது.

• •

ஆத்தங்குடி அருந்ததி சமூகசீர்திருத்த சங்கக் கமிட்டிக்கூட்டம் 25-2-45ந் தேதி தோழர் ப. வேலுமுத்து தலைமையில் நடந்தது. டை சங்கத்தின் ஆண்டுவிழாவை ஏப்ரல் 29ந்தேதி நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

உங்கள் இலட்சிய சொற்கள்

மனித சமுதாயம் ஒன்றாகவேண்டுமானால் மதம் ஒழிய வேண்டும்

பொருளாதாரம் ஒன்றாக வேண்டுமானால் கடவுள் ஒழிய வேண்டும்

பெரம்பூர் திருமணக்கூட்டத்தில் பெரியார் முழக்கம்

4-3-45-உ காலை 9 மணிக்கு சென்னை பெரம்பூர் திருவள்ளூர் புரம் வீதியில் பெரம்பூர் ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் முக்கிய அங்கத்தினரான தோழர் எஸ். வி. கணேசனுக்கும், தோழர் கே. டி. பி. ஷண்பகவல்லியம்மைக்கும் செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் டி. ஷண்முகம் அவர்கள் தலைமையில் திருமணம் நடந்தது.

திருமணத்தில் தோழர்கள் பகவதர், நடராஜன், அன்பழகன், பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் பேசினார்கள். எம். எஸ். எம். ரயில்வே உத்தியோகஸ்தர்கள், பெரம்பூர் கிளைச் சங்கத்தார் மணமக்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள்.

தலைவர் பேச்சு

தலைவர் ஷண்முகம் அவர்கள் முன்னுரையாகப் பேசுகையில் சுயமரியாதைத் திருமணம் நடத்துகிறவர்கள் நாளுக்கும், நேரத்திற்கும் நிகழ்ச்சியை அடிமைப்படுத்திக் கொள்ளாமல் மக்களின் சவுகரியமான நாளுக்கும் நேரத்திற்கும் தகுந்தபடி நிகழ்ச்சியை வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அப்படிக்கில்லாமல் காரியத்தையெல்லாம் புராண மரியாதைப்படி வைத்துக்கொண்டு பெயரைமாத்திரம் சுயமரியாதை என்று வைத்துக்கொள்ளுவது சரியல்லவென்றும், அனேகம் பேர் நம் இயக்கத்தில் புராணப்படி, வைதீக மூடநம்பிக்கைப்படி திருமணங்களை ஏற்பாடு செய்து கொண்டு காரியங்களையும் செய்து கொண்டு சுயமரியாதை என்று பெயர் கொடுத்து எங்களுக்கும் தொந்திரவு கொடுத்து பெருமையும் லாபமும் அடையப் பார்ப்பதானையும், யோக்கியப் பொறுப்பும் ஆன காரியமாக ஆகாது என்றும், பத்திரிகையில் நாழிகை, நக்ஷத்திரம் போடுவதும் அசௌகரியமான நேரத்தில் வைத்துக் கொள்வதும், அவசியமும், அறிவும் இல்லாத காரியங்களைச் செய்வதும் கண்டிக்கத்தக்கதென்றும், இயக்கத்திற்கும் கெட்ட பெயர் என்றும் கூறி மணமக்களைத் திருமண ஒப்பந்தத்தைச் சொல்லி மணநிகழ்ச்சியை நடத்திக்கொள்ளச் சொன்னார். மணமக்கள் ஒப்பந்தங்களைச் சொல்லி மாலை மாற்றிக்கொண்டு நிகழ்ச்சியை முடித்துக்கொண்டார்கள்.

பின் பல தோழர்கள் பேசிய பின்பு பெரியார் ஈ. வெ. ராமசாமி பேசினார். அதன் சாராம்சமாவது:—

ஈ. வெ. ரா. பேச்சு

"இங்கு திருமணத்தைப்பற்றி மாத்திரமல்லாமல் பொதுவாகவே சில பேச எண்ணியுள்ளேன். ஏனெனில் நான் திருமணத்தைப் பற்றிப் பேசுவது திருமண சீர்திருத்தத்திற்கு ஆகவே அல்ல. திருமணத்திற்கு சீர்திருத்தம் என்கின்ற ஒரு முடிவான திட்டம் இல்லை. அது காலதேசவர்த்தமானத்திற்கு ஏற்றபடி மாறிக் கொண்டேவரும். திருமணம் என்பதே மாறியும் இல்லாமல் போகும்படியான காலமும் வரலாம். திருமணம் என்பதாக ஒன்று 5000, 10000 வருஷங்களுக்கு முன்பு சிறப்பாக ஆரியர் வரவு காலத்திற்கு முன்பு இந்தப்படியாக நிபந்தனை வாழ்க்கை முறை இருந்தது என்பதே சந்தேகமாக இருக்கிறது. மேல் உலகம், மோட்சம், சூக்ஷம சரீரம், ஆத்மா என்கின்றதான உணர்ச்சிகள் இல்லாத காலத்திலும், தனி உடமை, சேர்த்துவைத்தல் உரிமை ஆகியவை இல்லாத காலத்திலும் இன்றைய கூட்டுவாழ்க்கையும் கட்டுப்பாடும் இருந்திருக்குமா என்றும், இந்த தன்மைகள் அதாவது மேலோகம், பிதுர்தேவதைகள், பிதுர்லோகங்கள், திதி திவசம் முறை ஆகியவைகள் சம்பந்தமான எண்ணங்களும், தனி உடமை முறைகளும் அழிக்கப்பட்டுவிட்ட காலத்திலும் இன்றைய அதாவது வாழ்க்கைத்துணை முறையானது இருக்குமா என்று பார்த்தால் இருக்காது என்றுதான் பெரிதும் தோன்றும்.

ஒருசமயம் இயற்கை உணர்ச்சிக்கு, அதாவது பசிக்கு ஆகாரம் வேண்டியிருப்பது போலும், நித்திரைக்கு ஓய்வு நேரம் வேண்டியிருப்பது போலும், சேர்க்கை உணர்ச்சிக்கு சிறிது நேர கூட்டுக்கு மாத்திரம் கூட்டு வாழ்க்கைக்கு யாராவது தேவை இருக்கும்படியான தன்மை ஏற்படலாம். பிள்ளை வேண்டும் என்கின்ற ஆசைகூட இன்றுபோல் இல்லாமல் போகலாம். பிள்ளை பெறும் முறையும்கூட மாற்றமடையலாம். இவைகளும் இவை போன்றவைகளும் இங்கு இன்று இன்றைய அனுபவங்களைப் பார்த்து முடிவு செய்யக்கூடியவைகள் அல்ல.

ஆதலால்தான் நான் திருமண சீர்திருத்தத்தை மாத்திரமே குறிவைத்து நாங்கள் இந்தத் துறையில் வேலை செய்யவில்லை என்று சொன்னேன்.

மற்றென்னவென்றால் நம் சமுதாய வாழ்வில் நாம் ஒரு பெரிய புரட்சியை செய்யவேண்டியவர்களாய் இருக்கிறோம்—அப்புரட்சிக்கு மக்களைத் திருப்பவே சிறு

சீர் மணமாறுதலாவது முதலில் ஏற்படவேண்டும் என்பதற்கு ஆக திருமணத்திற்கு அது வேண்டியதில்லை இது வேண்டியதில்லை, உன் மானத்தைப் பற்றி எண்ணிப் பார், உன் பகுத்தறிவை உபயோகித்துப்பார் என்றெல்லாம் சொல்கிறோம். இதில் மக்கள் தங்கள் அறிவைச் செலுத்தி மானத்தைக் கவனித்து மணமாற்றம் கொண்டார்களானால் அதை மற்ற அதாவது பெரும் புரட்சிக்குப் பயன்படுத்தலாம் என்கின்ற ஆசையேயாகும். ஆதலால் எங்கள் திருமண சீர்திருத்த லட்சியம் என்பது திருமணத்திற்கே அல்லவென்றும் இன்று நடக்கும் மாறுதலேதான் முடிந்த முடிவு அல்லவென்றும் முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

புரட்சியின் அவசியம்

நாம் செய்யவேண்டிய புரட்சி என்ன என்பது நீங்கள் அடுத்தாற்போல் சிந்திக்கவேண்டும்.

இங்கு கூடியுள்ளவர்களில் பெரும்பான்மை மக்களாகிய உங்களையே எடுத்துக்கொண்டு பேசுகிறேன்.

நீங்கள் யார்?

சமுதாயத்தில் கீழான ஜாதி (அதாவது பறையன், சக்கிலி முதலிய தீண்டப்படாத) வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

உங்கள் வாழ்வு—சராசரி மனிதத்தன்மைக்கும் கீழான ஈன வாழ்வு ஏழ்மை ஜீவிதம்.

உங்கள் உழைப்பு சரீர (உடல்) உழைப்பு. இவை மூன்றும் இழிவுக்கும் பரிதாபத்துக்கும் மானக்கேட்டிற்கும் உரிய தன்மையாகும். 6-அறிவுள்ள மனிதன் இப்படி இருக்கக் காரணமென்ன? நமது பஞ்சேந்திரியங்களில் இருக்கும் குறைபாடு என்ன? மற்றவர்கள் இருக்கும் மேன்மையான நிலைக்கு என்ன காரணம்? அவர்கள் பஞ்சேந்திரியம் நம்முடையதைவிட எப்படி மேம்பட்டது?

இந்த சிந்தனைதான் நமக்கு இப்போது வேண்டியதாகும்.

ஏன் தாழ்மையும் ஏழ்மையும்?

மனிதன் ஏன் சமுதாயத்தில் தாழ்மையாய் இருக்கிறான் என்றால் மதத்தினால் இழி ஜாதியாய்-இழி பிறப்பாய் இருக்கிறான். அதாவது ஜாதி என்றால் பிறப்பு என்றுதான் அர்த்தம் (ஜாதி என்பதெல்லாம் பிறப்பு என்பதைப் பொருத்தேயாகும்) பிறப்பினால் ஜாதிக்கு உயர்வு தாழ்வுக்கு ஆதாரம் மதமேயாகும். எந்த மதம் என்று கேட்பீர்கள், ஜாதியினால் (பிறப்பால்) கீழ் ஜாதியாய் இருக்கிற மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற மதம் எதுவோ அந்த மதம் தான். இன்று நீங்கள் கீழ்ஜாதியாய் இருக்கிறீர்கள் என்றால் எதனால்? நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற மதமாகிய இந்துமதம் என்பதுதான் உங்கள் இழிவுக்கு ஆதாரமாய் இருக்கிறது. எனவே இந்துமதம் ஒழியாமல், "இந்து மதம் ஒழிக்கப்படக்கூடிய மதம் அல்ல; அது மிகவும் பலமும் பாதுகாப்பும் பெற்ற மதம் என்றால் அம்மதத்தைவிட்டு நீங்கள் வெளிப்பட்டால் அல்லாமல் உங்கள் இழிவு நீங்காது. மத உணர்ச்சியோடு நீங்கள் எவ்வளவுதான் பாடுபட்டாலும் எத்தனை நாளைக்கும் பாடுபட்டாலும் உங்கள் இழிவு நீங்கவே நீங்காது. இதுவரை வெகு பேர் பாடுபட்டு படுதோல்வி அடைந்திருக்கிறார்கள்.

இந்தப் பல ஆயிர வருஷங்களில் கீழ் ஜாதியாய்ப் பிறந்து மேல் ஜாதியாய் செத்த மனிதன் ஒருவன்கூட கிடையாது; ஜாதியே இல்லாமல் பிறந்து, ஜாதியே இல்லாமல் செத்தவனும் எவனும் இல்லை. வேண்டுமானால் அவரவர் உங்களை ஏமாற்றவோ அல்லது தன்னை ஏமாற்றிக் கொள்ளவோ சாமியாய், ரிஷியாய், மகானாய், மகாத்மாவாய் செத்து இருக்கலாம். ஆனால் பறையனாய்ப் பிறந்து பிராமணனாய் செத்தவனோ, பிராமணனாய்ப்பிறந்து பறையனாய் செத்தவனோ எவனும் இல்லை. இந்துமதத்தை விட்டவன் எவனாவது ஜாதி இல்லாமல் செத்து இருக்கலாம். அவனும் ஏதாவது ஒரு மதக்காரனாய் செத்து இருப்பானே ஒழிய, மனிதனாய் செத்து இருப்பானா என்பது சந்தேகம் தான்.

ஆதலால்தான் நான் மனித பேதம் ஒழியவேண்டுமானால் மதம் ஒழியவேண்டும் என்கின்றேன்—அன்றியும் மதம் ஒழிந்த இடத்தில்தான் மனிதன் பிறப்பு பேதம் புதைக்கப்படுகின்றது.

அதுபோலவே தான், பொருளாதார—ஏழ்மை செல்வம் பேதம் ஒழியவேண்டுமானால் அவைகளின் உற்பத்தி ஸ்தானம், அதாவது தோன்றுமிடமும், காப்பு இடமும் ஒழிக்கப்படவேண்டும். ஏழ்மைக்கும் செல்வத்திற்கும் கர்த்தாவும், காவலும் கடவுளாய் இருக்கிறது. அப்படிப்பட்ட கடவுளைக் காப்பாற்றிக்கொண்டு அல்லது அக்கடவுள் ஆணைக்கு அடங்கினவனாய் இருந்துகொண்டு கடவுள் தன்மையை—செயலை—கட்டளையை நீ எப்படி மீற—சமாளிக்க—தாண்ட முடியும் என்று சிந்தித்துப்பார். அதனால்தான் மனித சமுதாய சமத்துவத்திற்கு மதம் ஒழிக்கப்படவேண்டியது எப்படி அவசியமோ அதுபோல் பொருளாதார சமத்துவத்திற்கும், அதாவது பொருளாதாரசமத்துவம் வேண்டுமானால் பொருளாதார பேதத்துக்கும் பேதத்தன்மை காப்புக்கும் ஆதாரமாய் இருக்கின்ற கடவுள் தன்மை ஒழிக்கப்படவேண்டியது அவசியமாகும்.

இது சமுதாய பொருளாதார சமத்துவக்காரருக்கு A. B. C. D. படிப்பாகும். இதை எந்த சமுதாய சமத்துவ வாதியாவது பொருளாதார சமத்துவ வாதியாவது பேசுகிறார்களா சிந்திக்கிறார்களா என்று பாருங்கள். ஏன் சிந்திப்பதில்லை என்றால் இந்தத் துறையில் இன்று பாடுபடுகிறவர்களாய்க் காணப்படுபவர்கள் பெரிதும் பொருளாதாரத்திலும் சமுதாயத்திலும் நல்ல நிலையில் நல்வாழ்க்கையில் இருக்கும் ஆட்களேயாகும். எலிகள் நலத்துக்கு பூனைகள் பாடுபடுவது போல் சமுதாயத்தில் உயர்நிலையில் இருக்கும் பார்ப்பனர்களும் பொருளாதாரத்தில் செளக்கியமாக இருக்கும் பிள்ளைகளும் அவர்கள் வாழ்வு நலத்திற்கும் சுகத்திற்கும் உங்கள் பெயர்களைச் சொல்லிக் கொண்டு வாழ்கிறார்கள்.

கடவுளையும், மதத்தையும் ஒழிக்கத் தயாராயில்லாதவனை உங்கள் கூட்டத்திற்குள் விடாதீர்கள். உங்கள் இளிச்சவாய்த்தனத்தினால் பொருளாதார சமுதாயப்

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

வருகிறது கோடைகால விடுமுறை!

மாணவர்களே என்னசெய்யப் போகிறீர்கள்?

சடந்த ஆண்டு கோடைகால விடுமுறையிலும், இவ்வாண்டு தசரா விடுமுறையிலும், நீங்கள் தமிழ்நாடெங்கும் திராவிடர் கொள்கையை விளக்கி முழக்கம் செய்தீர்கள். இதன் பயனாக பல்லாயிரக்கணக்கான மக்கள் விழிப்படைந்தனர். இவ்வருடம் கோடைகால விடுமுறை நெருங்குகிறது. மாணவர்கள் சுற்றுப் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பிரச்சாரம் துவக்குவதற்கு முன் சில நாட்கள் ஈரோட்டில் பயிற்சியளிக்கப்படும். இதில் சேர்ந்துகொள்ள விரும்பும் மாணவத் தோழர்கள் தங்கள் பள்ளியின் விடுமுறை ஆரம்பத் தேதியையும், தங்களால் எந்தத் தேதியில் கலந்துகொள்ள முடியும் என்ற விவரத்தையும் தயவுசெய்து எழுதக் கோருகிறேன்.

• •

அன்புடையீர்,

சென்றவாண்டு கோடை விடுமுறையிலும் இவ்வாண்டு தசரா விடுமுறையிலும் நாங்கள் துவக்கிய திராவிடமாணவர் சுற்றுப்பிரயாண பிரச்சாரத்தை வெற்றிகரமாக நடத்திக்கொடுத்தீர்கள். அதற்கு திராவிடமன்றென்றும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. இவ்வாண்டும் முன்போல் மாணவர் பிரச்சாரம் துவக்க எண்ணியுள்ளோம். இதுசமயம், தங்களுடைய ஒத்துழைப்பைப் பெரிதும் எதிர்பார்க்கிறோம். எந்தெந்த ஊர்களுக்கு அழைக்க விரும்புகிறீர்களோ, அதை சீக்கிரமே தெரியப்படுத்தக் கோருகிறோம். சுற்றுப்பிரயாணம் அநேகமாக ஏப்ரல் முதல் கிழமையில் துவக்கப்படலாம்.

S. தவமணிராசன், செயலாளர்,
திராவிடர் மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

தோழர் டி. பி. வேதாச்சலம்

தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் திருச்சி முனிசிபல் வக்கீலாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திராவிட நாட்டிற்கோர் நற்செய்தி!

உணர்ச்சி, உற்சாகம் ஊட்டக்கூடிய காதல், வீரம், சோகம், நகைச்சுவை நிறைந்த, "சேரன்—செங்குட்டுவன்" என்ற நாடகம் சின்னசேலம் 'கலாமணி நாடக மன்றத்தாரால்' அதிவிரைவில் திராவிடநாடெங்கும் நடைபெறும்.

அஜாக்கிரதையாகப் பேசுவதை நிறுத்தி

போராடும் நமது வீரர்களுக்கு பாதுகாப்பளியுங்கள்

★

"துருப்புகளின் சௌகரியத்திற்கு" என்று குறிப்பிட்டு

மே. த. கவர்னர்

யுத்த நிதிக்கு

மீண்டும் பணம் கொடுத்துதவி அவர்களுக்கு நலன் தேடுங்கள்.

வேண்டுகோள்

சென்னைத் தோழர்களுக்கு,

திராவிடர் கழக இரசீது புத்தகங்களைப் பெற்றிருக்கும் தோழர்கள் இதுவரை தனியாகக் கடிதம் எழுதியும், நேரில் கேட்டும், புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்காமலிருப்பதுபற்றி மிகவும் வருந்துகிறேன். எனவே தயவுசெய்து இன்னும் ஒரு வாரத்திற்குள் இரசீது புத்தகம் வாங்கியுள்ள தோழர்களனைவரும், சேர்ந்திருந்தாலும், இல்லாவிட்டாலும், புத்தகங்களை என்னிடம் சேர்த்துவிடுமாறு கண்டிப்பாகக் கேட்டுக்கொள்கிறேன். தோழர்கள் இதை மிக அவசரமாக கவனிக்கவும், மன்னிக்கவும்.

பொதுக்காரியதரிசி,
சென்னை நகர திராவிடர் கழகம்.

வடஆற்காடு ஜில்லா தெ. இ. ந. உ. சங்கம் கலைக்கப்பட்டது. விவரம் அடுத்த இதழில்.

தமிழ்நாட்டு முஸ்லிம் மறுமலர்ச்சி எழுத்தாளர் மாநாடு

ஷை மாநாடு "டெக்கான்டைம்ஸ்" ஆசிரியர் ஆலிஜனாப் ஏ. ஏ. ரவூப்சாகிப் பி. ஏ., தலைமையின்கீழ் 25-3-45ல் ஈரோட்டில் நடைபெறும். மாநாட்டை ரவணசமுத்திரம் கனி பி. ஏ. திறந்து வைப்பார். சர்தார் ஹயாத்கான் எம். எஸ். சி. எல். எல். பி. (அலிகார்) கொடியேற்றுவார். பண்ணை ஆரம்பவிழாவை பி. ஏ. காதர்மீரான் சாகிப், எம். ஏ. எல். எல். பி. (அலிகார்) நடத்திவைப்பார்.

திண்டுக்கல் தமிழ் இசைக் கழகம்

திண்டுக்கல் ஜுபிலாசில், 18-3-45ல் தேதி ஷை கழக முதலாவது ஆண்டுவிழா சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் தலைமையில் நடைபெறும்.

குடி அரசு

1945-ஆம் மார்ச்சு-மீ 10-உ

பின் எது காரணம்?

"மனித சமுதாயம் ஒன்றாக வேண்டுமானால் மதம் ஒழிய வேண்டும்"

"பொருளாதாரம் ஒன்றாக வேண்டுமானால் கடவுள் ஒழிய வேண்டும்"

இவைதான் இன்றைய திராவிட மக்களின் இலட்சியச் சொற்களாக இருக்கவேண்டும் என்று பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சென்ற 4-3-45-ந் தேதி சென்னை பெரம்பூரில் கணேசன்—சண்முகவல்லி திருமணத்தின் போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இன்று இந்நாடு இருக்கும் நிலையையும் இதற்கு எது காரணம் என்பதையும் எண்ணிப் பார்ப்பவர்கள் இந்த முடிவுக்குத்தான் வருவார்கள். பெரியார் அவர்கள் ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் இம்முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. அவரது அனுபவத்தின் முதிர்ச்சிதான் இம்முடிவுக்கு வரும்படிச் செய்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

இன்று இந்நாட்டில் பலகோடி மக்கள் நிரந்தரமாக நித்திய தரித்திரத்திலும், அறியாமையில் மூழ்கியிருப்பதற்கும் எது காரணமாகயிருந்துவருகிறது? ஒருசிலர் என்றென்றும் சுகபோகத்திலும் அறிவோடுகூடி விளங்குவதற்கும் எது காரணமாகயிருந்துவருகிறது? உலகில் எந்த நாட்டில், இவ்வாறு ஒரு குறிப்பிட்ட குலமக்கள் என்றென்றும் ஏழ்மையிலும் அறியாமையிலும் பசி, பிணி முதலிய நோய்களினால் பீடிக்கப்பட்டு வதைபடவும், ஒரு சில குல மக்கள் என்றென்றும உயர்வாழ்வில் வாழ்வுமான நிலைமை யிருந்துவருகிறது? அந்நாட்டுவரலாறுகளைப் பார்ப்போமானால், ஏழை-பணக்காரர், முதலாளி- தொழிலாளி என்ற வேற்றுமைகள் இருந்துவந்திருப்பதையும் இருந்து வருவதையும் பார்க்கலாம். ஆனால் இவ்வேற்றுமைகள் ஒரு சாராரையே-ஒரு குல மக்களையே என்றென்றும் பற்றிக்கொண்டு வந்திருப்பதையோ வருவதையோ காணமுடியாது. ஆனால் இந்நாட்டு வரலாற்றைப் பார்ப்போமானால், அதுவும் ஆரியர் இவ்வுபகண்டத்தில் நுழைந்ததற்குப் பிறகு ஏற்பட்ட வரலாற்றைப் பார்ப்போமானால் ஒரு சில குலத்தார் என்றென்றும் சுகபோகத்திலும், ஒரு சில குலத்தார் என்றென்றும் கீழான நிலையிலும் ஏழ்மையிலும் இருந்து வந்ததையும் வருவதையும் பார்க்கிறோம். அந்நாடுகளுக்கும் இந்நாட்டுக்கும் அவ்வேற்றுமை காணப்படுவதற்கு என்ன காரணம்? இதை எவராவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? சிந்தித்துப் பார்த்திருப்பார்களேயானால், கண்டிப்பாக பெரியார் வந்த முடிவுக்குத்தான் வந்திருப்பார்கள் அல்லது வருவார்கள். உண்மையிலே தங்கள் மூளையை அடகுவைக்காமலிருந்திருப்பார்களேயானால்.

இந்நாட்டில், வர்ணாசிரம தர்மம் எதைப் போதிக்கிறது? என்ன வற்புறுத்துகிறது? அரசியல் வேடத்தில் காந்தியாரின் வார்தாக் கல்வித் திட்டத்தின் அடிப்படை நோக்கமும் என்ன? அந்தந்த வர்ணத்தார்-அந்தந்தஜாதியார் அந்தந்த ஜாதிக்குரிய தொழிலை செய்ய வேண்டும், மீறினால் ஒழுக்கம் கெட்டு உலக சமாதானம் அழிந்து நாடு நாசமுறும்; ஆகவே மீறுகிறவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும் என்று தானே கூறுகிறது. காந்தியாரின் வார்தா கல்வித் திட்டமும் அந்தந்த குல மக்கள் அவரவர்களுடைய பெற்றோர்களின் தொழிலையே பழகவேண்டும் என்பதைத் தானே வலியுறுத்துகிறது? அன்று வகுக்கப்பட்ட வர்ணாச்சிரம முறைப்படி அந்தந்த குல மக்கள் அவரவர்களுக்குரிய தொழிலைச் செய்துவந்தால், இன்று தாழ்ந்த நிலையில், இழிவான நிலையில் உள்ள மக்கள் என்றாவது உயர்வடைய முடியுமா?, சுகமடைய முடியுமா என்று எண்ணிப்பாருங்கள். உதாரணமாக 'தீண்டப்படாத' ஜாதியென்று சொல்லப்படும் மக்கள் அவர்களுக்குரிய தொழிலையே செய்து வருவார்களேயானால், அவர்கள் என்றாவது ஏன், இவ்வுலகமுள்ளளவாவது பொருளாதாரத் துறையில் உயர்வடைய முடியுமா? சுகம்பெற முடியுமா? கல்வி அறிவுபெற முடியுமா? கல்விகற்கவேண்டும் என்ற ஆசையாவது பிறக்கயிடமுண்டா? கல்விகற்றால் 'பாபமாச்சே!' 'நாம் படிக்கலாமா?' என்ற அச்சம் அவர்களது உள்ளத்தினின்று நீங்க வழியுண்டா?

இவைகள் எல்லாம் இன்று எங்கிருக்கின்றன? எல்லோரும் எல்லாத் தொழிலைச் செய்கிறார்கள்; எல்லோரும் படிக்கிறார்கள்; ஆதலால், பழைய வர்ணாசிரம தர்மத்தைப்பற்றி பேசுவதில் என்ன பயன் என்று சிலர் சொல்லலாம். ஏதோ பிரிட்டிஷ் ஆட்சி தோன்றியபிறகு ஒருசிலருக்கு இவ்வசதி ஏற்பட்டிருக்கிறதென்பதை ஒத்துக்கொண்டாலும், அவர்கள், சமுதாயத்தில் எவ்வாறு கருதப்பட்டு வருகிறார்கள், எவ்வாறு மதிக்கப்படுகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு சிலர் பெற்றிருக்கும் இவ்வசதியையும் இன்று அழிக்க வேஷக்காரர்கள் முயன்று வருகிறது. இனி இப்பசப்பு மொழிகளைக் கேட்டு எவரும் ஏமாந்து போக மாட்டார்கள். இனி ஏய்க்கவும் முடியாது. இதனை பாதிக்கப்பட்ட மக்கள் நன்குணர்ந்து விட்டார்கள். தென்னாட்டில் திராவிட மக்களும் வடநாட்டில், பிற்படுத்தப்பட்ட மக்களும் உணர்ந்து விட்டார்கள்.

தாங்கள் இவ்விழிவான நிலையிலிருப்பதற்கு முக்கிய காரணம், வர்ணாச்சிரமதர்மம் என்பதையும், இவைகளை விளக்குவதும் நிலைக்கச் செய்வதும் வேதங்களும், புராணங்களும், மனுநீதிகளும் என்பதையும், நிலைக்கச் செய்பவைகள் மதங்களும், கோவில்களும் என்பதையுமுணர்ந்து விட்டார்கள். இவைகள் ஒழிக்கப்பட்டால் ஒழிய தாழ்வு நீங்கமுடியாது உயர்வடைய வழியில்லை.

இதனைப் பெரியார் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார் தமது சொற்பொழிவில்.

"பொருளாதார ஏழ்மை செல்வம் பேதம் ஒழிய வேண்டுமானால் அவைகளின் உற்பத்திஸ்தானம், அதாவது தோன்றுமிடமும், காப்பு இடமும் ஒழிக்கப்பட வேண்டும்"

ரோஜா முத்தையா

என்று குறிப்பிட்டிருக்கிறார். இன்றைய ஜாதி பாகுபாடு, வர்ண பேதம் எதனால் நிலைத்து நிற்கின்றன? மதத்தினாலல்லவா? மதத்தாலே இவைகள் தோன்றுவதற்கு இடமாக இருந்து வருகிறது. ஆகவே பேதம் ஒழிக்கப்பட இவை ஒழிக்கப்பட வேண்டும், என்பது விளங்கவில்லையா? எனவேதான் பெரியார் அவர்கள் மதம் ஒழிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்திக் கூறியிருக்கிறார். அடுத்தபடியாக, இவைகளுக்குப் பாதுகாப்பு அளித்து வருவது கடவுள்கள். ஆகவே கடவுள்களும் அழிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்.

பொருளாதாரத்தின் சமத்துவம் பெறுவதற்குமுன், மனிதனை மனிதனாக மதிக்கப்படவேண்டும். எவரும் எத்தொழிலையும் செய்யலாம் என்ற நிலைமை ஏற்படவேண்டும். இவைகள் ஏற்படாதவரை இவைகள் ஏற்படுவதற்கு தடையான காரியங்கள் இருந்துவரும்வரை, பொருளாதார சமத்துவத்தை எவ்வாறு அடையமுடியும்? பொதுவுடைமையைப்பற்றி வானளாவபேசும் தோழர்கள் இதனை சிந்தித்துப்பார்க்கட்டும்; பொருளாதார சமத்துவம் ஏற்படாமலிருந்து வருவதற்குப் பின்னது காரணம் என்பதை எண்ணிப் பார்க்கட்டும்.

தமிழிசைப் போட்டி

பன்னீர்செல்வம், நாகம்மாள் நினைவு நாளை முன்னிட்டு ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் ஈரோட்டில் இசை போட்டி நடைபெறும். பிரவேசக்கட்டணம் இல்லை. சேர விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

முகவரி:

எஸ். ஆர். சந்தானம், காரியதரிசி, கோவை ஜில்லா திராவிடர் கழகம், ஈரோடு.

P. பழனிச்சாமி, S. R. சந்தானம்,
செயலாளர்கள்.

மாகாண பௌத்த மாநாடு

சென்னை, தென்னிந்திய பௌத்த சங்க ஆதரவில் "மாகாண 5-வது பௌத்த மாநாடு" 31-3-45, 1-4-45 சனி, ஞாயிறுகளில் சென்னை, எழும்பூர் (E. R. S.) பள்ளியில் நடைபெறும்.

திராவிடர் கழகத்திற்கு
(ஜஸ்டிஸ் கட்சிக்கு)
10-3-45ந் தேதி வரை 29412 அங்கத்தினர்கள் ரூ. 2927—4—0 சந்தா

மார்ச்சு மாதம் 10ந் தேதி வரை திராவிட கழகத்திற்(ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

1. கோவை	4855	9. வட ஆற்காடு	1571
2. தஞ்சை	4820	10. மதுரை	1328
3. சேலம்	4460	11. செங்கல்பட்டு	685
4. திருச்சி	3834	12. திருவிதாங்கூர், (நாஞ்சினாடு)	168
5. இராமநாதபுரம்	2010	13. இலங்கை	165
6. திருநெல்வேலி	1961	14 பெங்களூர்	158
7. சென்னை	1700	15. புதுக்கோட்டை	59
8. தென் ஆற்காடு	1638		

ஆகமொத்த அங்கத்தினர்கள் 29412. சந்தா ரூ. 2927-4-0.

செங்கற்பட்டு நகரம் திராவிட கழகம்

செங்கற்பட்டில் திராவிட கழகம் அமைப்பதற்கும், ஒரு இலவசவாசக சாலை இக்கழகத்தின் ஆதரவில் நடத்திவருவதற்கும் முடிவுசெய்து மார்ச்சமாதம் மூன்றாவது வாரத்தில் ஆரம்பம்செய்ய இந்நகர தோழர்கள் உறுதி செய்திருக்கிறார்கள். கழகத்தில் ஏற்கெனவே இந்த நகரத்தில் 90 அங்கத்தினர்கள் தான் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். மார்ச்சு மாதம் 15ந் தேதிக்குள் திராவிட கழகத்தின் அங்கத்தினர்களாக தங்களைப் பதிவுசெய்துகொள்ள எண்ணங்கொண்டுள்ள தோழர்கள் கீழ் குறித்துள்ள இடத்தில் பதிவு செய்துகொள்ள வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆக்க வேலைகள் பல தொடர்ந்து எதிர்காலத்தில் செய்யவேண்டியிருப்பதால் கழகத்தை பலப்படுத்த விரும்பும் ஒவ்வொரு திராவிட நண்பரும் உடனே கழக அங்கத்தினராக தன்னைப் பதிவுசெய்துக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இடம்: 54 செட்டி தெரு,
செங்கற்பட்டு.

பி. வி. சீனுவாசன்,

சென்னை இளைஞர் பயிற்சிக்கழகம்

இக்கழகத்தின் ஆதரவில் 18-3-45 ல் தங்கசாலை 192 எண் கட்டிடத்தில் 'புது உலகம்' என்பது பற்றி தோழர் என். ஜீவரத்தினம் பேசுவார்.

கரூர் மாணவர் மாநாடு

"கரூர் தாலுகா திராவிட மாணவர் மாநாடு" வருகிற ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நடைபெறும். தோழர் நெடுஞ்செழியன் பி. ஏ, (ஆனர்ஸ்) தலைமை வகிப்பார். அவ்வமயம் பெரியார், தளபதி அண்ணாதுரை, தோழர்கள் சனார்த்தனம், கவி பாரதிதாசன், என். இராமநாதன், அன்பழகன் முதலியவர்கள் பேசுவார்கள்.

மறைவு

தஞ்சை கீழவாசலைச் சார்ந்த தோழர் ந. கண்ணுசாமி 5-1-44-ந் தேதி பெரிய ஆஸ்பத்திரியில் மார்பு நோயால் மறைந்தார்.

காரைக்குடியில் திராவிடர் மாநாடு

இராமநாதபுர மாவட்ட முதலாவது திராவிடர் கழக மாநாட்டை அநேக தோழர்களின் விருப்பத்திற்கிணங்க காரைக்குடி கிருஷ்ணா டாக்கீஸில் 8-4-45 ஞாயிற்றுக்கிழமை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இம் மாநாட்டை நடத்துவதற்காக தோழர் ராம. சுப்பையா அவர்கள் மாவட்ட முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். அவருக்கு வேண்டிய உதவி செய்யுமாறு இயக்கத் தோழர்களை வணக்கமாய் கேட்டுக் கொள்கிறோம். மற்ற விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

வரவேற்புக் கமிட்டியார்.

இந்து சட்டத்திருத்தம்

சென்னையில் விசாரணை

சர் பி. என். ராவ் [தலைவர்] டாக்டர் துவாரகநாத் மித்தர், தோழர்கள் டி. பி. கார்ப்பூர், டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி ஆகியோர் அடங்கிய இந்து சட்டத்திருத்தக் கமிட்டியினர் 5-ந் தேதி பிற்பகல் சென்னை மாகாணச் சார்பில் சாட்சிகளை விசாரிக்கத்தொடங்கினர். அதுசமயம் கீழ்க்கண்ட சிலர் அளித்த சாட்சி வருமாறு:-

தோழர் ஸ்ரீநிவாச சாஸ்திரி

ரைட் ஆனரபிள் தோழர் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரி கமிட்டி முன் அளித்த சாட்சியத்தின் சாரம் வருமாறு:

இந்து சட்டத்தைத் திருத்துவதற்காக முயற்சி செய்யப்பட்டு, சட்டத் திருத்தங்கள் வெளியிடுவது ஆட்சேபமற்ற செயலாகும். இப்படிச் செய்வது அவசியங்கூட. இவ்வாறு இந்து சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு இப்போதைய சட்ட சபை எல்லாவகையாலும் அதிகாரமுடையதாகவே இருக்கிறது. இப்போதைய சட்ட சபை மிகவும் பழைமையானது நாட்பட்டது வலிமையிழந்தது என்றெல்லாம் கூறப்படுவதை நான் லட்சியம் செய்வது கிடையாது. அது புதிய இளைய சபையாக இருந்துவிட்டால் மட்டும், இன்னும் விரிவான அதிகாரமுடையதாக இருந்துவிட்டால் மட்டும் அப்போது இத்தகைய திருத்தங்களை நிறைவேற்றிவிட்டால், அவை மிகுந்த மதிப்புடையவைகளாக ஆகிவிடுவதெங்ஙனம் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

மாதர்களுக்குச் சொத்துரிமை அளிக்க முயல்வதை நான் ஆதரிக்கிறேன். இது பற்றிச் செய்யப்பட்டிருக்கும் திருத்தங்கள் நவீன காலப்போக்கிற்கு ஏற்ற வகையில் இருக்கின்றன. இத்தகைய விஷயங்களில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களையும் உயர்த்துவதற்காகச் செய்யப்படும் மாற்றங்களை நான் வரவேற்கிறேன்.

இந்து சட்டத்தில் சிவில் திருமண முறையை புகுத்துவது பற்றிச் சில ஆட்சேபங்கள் கிளப்பப்பட்டதை நான் கவனித்தேன். ஏன் இத்தகைய ஆட்சேபம் கிளப்பப்படுகிறது என்பதற்கு ஒரு காரணமும் எனக்குத் தெரியவில்லை. விவாகரத்து சட்ட விதியையும் நான் ஆட்சேபிக்கவில்லை. சட்டத்தில் ஏகதார மணம் விதிக்கப்படுமாயின், விவாகரத்து விதி அவசியமானதுதான்.

ஏகதாரமணத்தைச் சட்டபூர்வமானதாக்கி வைத்துவிட்டால், இந்துக்கள் பெருவாரியாக முஸ்லிம்களாகிவிடக் கூடும் என்று சில மக்கள் அஞ்சுகிறார்களே! அதுபற்றித் தங்கள் கருத்தென்னவென்று கமிட்டியின் சேர்மன் கேட்டதற்கு, "இத்தகைய பீதியை நான் சிறிதுகூட லட்சியம் செய்யவில்லை. முதலில் இதைச்சிலர் மீறலாம். ஆனால் காலக்கிரமத்தில் இந்த முக்கியமான, அவசியமான மாறுதலை ஏற்று நடக்க மக்கள் பழகிக்கொள்வார்கள்" என்று தோழர் சாஸ்திரி பதிலளித்தார்.

தோழர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர்

ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் சாட்சியம் கூறுகையில், புதல்விகளுக்குச் சொத்துரிமை அளிப்பதில் வாரிசுரிமை தரப்படுவதையும், விதவைகளுக்கு அவர்கள் ஆயுட்காலம் வரையில் அனுபவிப்பது போன்ற உரிமை அளிக்கப்படுவதையும் நான் ஆதரிக்கிறேன்.

தோழர் இந்திராணிபாலசுப்ரமண்யம்

திருமணமான புதல்விகளும், திருமணமாகாத புதல்விகளும், புதல்வர்களைப் போன்று சரிசமானமாகச் சொத்துரிமை அளிக்கப்படுதல் வேண்டும். புதல்விகளுக்குச் சொத்து வாரிசுரிமையாகத் தரப்படுவதை நான் ஆதரிக்கிறேன். ஏகதார மணம் கண்டிப்பாக அனுஷ்டிக்கப்படுமாறு விதிசெய்தல் வேண்டும். கலப்புமணம் வைதீகமுறைத் திருமணங்களில் இடம் பெறுதல் வேண்டும். விவாகரத்தை நான் ஆதரிக்கிறேன். ஆனால் அதற்கென்று விதிக்கப்படும் இடைக்காலம் குறைவாக இருக்கவேண்டும். அதனை 5 ஆண்டுகாலம் என்று நிர்ணயிக்கலாம். கணவன் எடுத்திருந்தாக்கூட, விதவை தத்து எடுத்துக்கொள்ளும் உரிமை அளிக்கப்படவேண்டும். விவாகரத்துக்குச் சட்டபூர்வமான அனுமதி இருக்குமாறு விதிசெய்தல் வேண்டும்.

ஸர் வேபா ராமேஸம்

நான் இந்துசட்டத் திருத்தத்தை ஆதரிக்கிறேன். புதல்விகளுக்கு முதலில் $\frac{1}{4}$ பாகம் சொத்துரிமை அளிக்கப்பட்டு வரதட்சணைக் கொடுமை ஒழிக்கப்பட்ட பிறகு, மகன் பங்கில் அரைப்பகுதியாக உயர்த்திவிடலாம். திருமணச் செலவுகளைப் பற்றியும் சட்டத்தில் ஒரு விதியைச் சேர்த்துக் கொள்ளலாம். புதல்விகளுக்கும், விதவைகளுக்கும் வாரிசுரிமை இருக்குமாறு சொத்துரிமை அளிப்பது இப்போதைக்கு விரும்பத்தக்கதாக இல்லையென்றே நான் கருதுகிறேன். ஏகதார மணத்தை வற்புறுத்துவதை நான் ஆதரிக்கிறேன். ஏகதார மணம் வற்புறுத்தப்பட்டால் விவாகரத்துக்கு உரிமை இருத்தல் வேண்டும். இருதாரப்பாருக்கும் விவாகரத்து உரிமை இருத்தல் வேண்டும். இதில் ஏதேனும் சங்கடமிருந்தால் இப்போதிருக்கிறபடியே விட்டுவிடலாம். கலப்புமணம், சகோதரத் திருமணம் (மிக நெருங்கிய இரத்தக்கலப்புடைய உறவினர் தவிர) ஆகியவற்றை நான் ஆதரிக்கிறேன். சிற்றன்னையின் மகளைத் திருமணம் செய்து கொள்ளுவது தடுக்கப்பட வேண்டும். விவாகரத்தை நான் ஆதரிக்கிறேன். ஆனால் நிபந்தனைகள் மிகவும் கடுமையாக இருத்தல் கூடாது. விதவைகள் தத்து எடுத்துக்கொள்வதில் முழு உரிமை அளிக்கப்படுவதை நான் முழுவதும் ஆதரிக்கவில்லை. இத்தகைய உரிமை பம்பாய் மாகாணத்தில் பெருந் தீமை உண்டு பண்ணிவிட்டது. இதுவிஷயத்தில் சில நிபந்தனைகள் இருத்தல் வேண்டும்.

தோழர் எஸ். முத்தையா முதலியார்

புதல்விகளுக்குச் சரிபாதி சொத்துரிமையும் திருமணச்செலவுக்கு ஏற்பாடும் செய்யப்படுவதை நான் ஆதரிக்கிறேன். விதவைகளுக்கு வாரிசு பாத்திய சொத்துரிமை அளிப்பதை நான் முழுவதும் ஆதரிக்கவில்லை. சொத்து குடும்பத்திலேயே இருக்க வேண்டும். தேவை ஏற்படும்போது, விதவை கோர்ட் அனுமதிபெற்று சொத்து பெறலாம். ஏகதார மண விஷயத்தில், சில இனங்களில் 2-வது திருமணத்திற்கு அனுமதிக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். இத்தகைய சந்தர்ப்பத்தில் முதல் மனை 3-ல் 1 பங்கு அல்லது 4-ல் 1 பங்குச் சொத்தை ஜீவனாம்சமாகக் கொடுக்கலாம். மனைவியின் விருப்பத்தின் மீதே விவாகரத்துக்கு அனுமதி தரலாம். கலப்பு மணம், சகோதர மணம் முதலியவற்றை நான் ஆதரிக்கிறேன்.

தோழர் கூட்டிகிருஷ்ண மேனன்

இவர் சாட்சியம் கொடுக்கையில், திருமணம் ஆகியிருந்தாலும், இல்லாவிட்டாலும் பெண்களுக்குச் சம சொத்துரிமையிருக்கவேண்டுமென்றும், சீதன(டௌரி) முறை பல தகப்பனார்களைத் திண்டாட்டத்தில் விட்டு ஒழித்துமிருப்பதால், அதை சட்டவிரோதமென்று சட்டத்தில் குறிப்பிடவேண்டுமென்றும் கூறினார். திருமணம், ரத்து ஆகிய விஷயங்களில் திருத்தம் போதுமான அளவு தாராளமாக இல்லையென்றும், மருமக்கத்தாயச் சட்டம் ஆண் பெண்கள் வித்தியாசமின்றி மிகவும் தாராளமானதாக இருக்கிறதென்றும், அதையேகூட ஏற்றுக் கொள்ளலாமென்றும், தத்து பற்றிய திருத்த விதியைத் தாம் ஆதரிப்பதாகவும் பொதுவாகத் தங்களைத் தாம் ஆதரிப்பதாகவும் கூறினார்.

தோழர் கோவிந்தமேனன்

கிரவுன் பிராஸிகியூடர் தோழர் கோவிந்தமேனன் சாட்சியம் கொடுக்கையில், மலபாரில் மருமக்கத்தாயச்சட்டப்படி

விவாகரத்து உரிமையிருந்து வருகிறதென்றும், 'இந்து' என்றால் யார் என்பதைச் சட்டத்தில் விளக்கவேண்டுமென்றும் கூறியதோடு, தோழர் குட்டிகிருஷ்ணன் அவர்களின் அபிப்பிராயத்தை ஆதரிப்பதாயும் கூறினார்.

தோழர் எஸ். குருசாமி

பொதுவாக இந்த சட்டத் திருத்தத்தை வரவேற்கிறேன். பெண்களுக்குத் திருமணமாயிருந்தாலும், இல்லாவிட்டாலும், புதல்வர்களுக்கு அளிக்கப்படுவதுபோலச் சம சொத்துரிமை வழங்கப்படவேண்டும்.

கலப்பு மணத்தை ஆதரிக்கிறேன். கலப்பு மணங்கள் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டவைகளாக்கப்பட வேண்டும். விவாக ரத்து உரிமை வழங்கப்படவேண்டும்.

தோழர் குஞ்சிதம் குருசாமி

இவ்விதச் சட்டம் வெகு நாட்களுக்கு முன்பே வந்திருக்கவேண்டும்.

பெண் குழந்தைகளையும் தத்து எடுத்துக்கொள்ள உரிமைவேண்டும். விவாக ரத்து உரிமையும், கலப்பு மணத்தையும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

சொத்துரிமையில் ஆண் பெண் வித்தியாசமிருக்கக் கூடாது.

தோழர் எஸ். இராமநாதன்

நான் 1937—39ல் காங்கரஸ் மந்திரியாயிருந்தேன். ஆனால் நான் இப்போது சுயமரியாதை இயக்கச் சார்பிலேயே சாட்சியம் சொல்ல வந்திருக்கின்றேன். காங்கரஸ் சார்பில் சாட்சியம் சொல்ல வரவில்லை. நான் சுயமரியாதை இயக்கத்தின் காரியதரிசி.

உயர்ந்தஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற வித்தியாசங்களையும், ஜாதிப்பிரிவுகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும், மனித சமூகத்திலிருந்து அகற்றுவதுதான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய கொள்கை. 1926-ல் சுயமரியாதை இயக்கம் துவக்கப்பட்டது. இது பொது மக்களின் தொடர்பு கொண்ட பெரிய இயக்கம்.

புதல்விகளுக்கும் புதல்வர்களுக்கும் சமமான சொத்துரிமை இருத்தல் வேண்டும். சுயமரியாதைத் திருமணங்கள் சட்டபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

இத்திருமணம் நடத்துவதற்கு இன்னமுறை என்று ஒன்றும் வகுக்கப்படவில்லையென்றாலும், பெருவாரியாக, பொதுக்கூட்டத்தலைவர் முன்னிலையில் திருமணத்தை நடத்திவருகிறார்கள். இம்மாதிரி இத்திருமணங்கள் அநேகம் ஜில்லாக்

கேள்வி: இதுவரை இத்திருமணங்களைச் சட்டபூர்வமாகப் பதிவு செய்யவில்லையா?

பதில்: நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட்டுக்கொள்வதே கிடையாது. எனினும், எந்தவகைத் திருமணங்களாயிருந்தபோதினும், திருமணங்களை இனிமேல் சட்டாயமாக ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்று சட்டம் செய்யவேண்டும். மேஜர் வயது வந்தவர்களே திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுதல் வேண்டும். திருமணங்களை ஆடம்பரமாகச் செய்ய அனுமதிக்கக்கூடாது. வெறும் மாலை மாற்றிக் கொள்வதுடன் முடிவாகச் செய்துவிட வேண்டும்.

குடும்பத்தைவிட்டு சன்யாசிகளாகவோ, சாமியார்களாகவோ போய்விடுபவர்களுக்கு, பிறகு யாதொரு உரிமையும் குடும்பத்தில் இருக்கக்கூடாது. அவர்களை நாடோடிகள் என்றே கருதவேண்டும்.

கலப்புமணம் அவசியம் வேண்டும். விவாகரத்து உரிமை இருதாரப்பினருக்கும் வழங்கப்படவேண்டும். சாதாரணமாக கோர்ட்டுக் கொடுத்தே விலக வசதி செய்யவேண்டும்.

இந்த இந்துசட்டத் திருத்தங்கூட வைதீகர்களின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சி அரைகுறையாகச் செய்யப்பட்டதாகத்தான் இருக்கிறதென்பதே எனது அபிப்பிராயம். இன்னும் இதைவிட அதிக முற்போக்கைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். வைதீக எதிர்ப்பைக் கண்டு அஞ்சுவதைவிட்டொழிக்க வேண்டும்.

தோழர் எம். ஏ. ஜானகி

திருத்தங்களனைத்தையும் வரவேற்றார். விவாக ரத்து விதிகள் இன்னும் எளிதாக்கப்படவேண்டுமென்றார். கணவன் மனைவிகளுக்கிடையில் பெரிய அளவு வயது வித்தியாசமிருப்பதைத் தடுக்க ஏதேனும் விதிகள் இயற்றப்படவேண்டும் என்றும் பெண்ணுக்கும் ஆணுக்குமிடை 10 வயதுக்கு மேற்பட்ட வித்தியாசமிருக்கக் கூடாது என்றும் கூறினார்.

திறப்பு விழா

11-3-45 மாலை 4 மணிக்கு தரங்கம்பாடி அரசர் தெருவில் உள்ள வாலிபர் முன்னேற்றக் கழகத்தைப் பெரியார் தோழர் வி. கனகசபை நாடார் தலைமையில் நாகை தோழர் டி. வி. சொக்கப்பா எம். ஏ., எல். டி., அவர்கள் திறந்து வைப்பார்.

மாலை 6-30 மணிக்கு காப்பகாரும் மைதானத்தில் நடக்கும் பொதுக் கூட்டத்தில் டி. வி. சொக்கப்பா, புலவர்

சேலம் ஜில்லா நெசவாளர் துயரம்

வேண்டுகோள்

சேலம் ஜில்லா கைத்தறி நெசவாளர் மத்திய கமிட்டி ஏற்படுத்த சேலம்ஜில்லாவிலுள்ள எல்லா தாலூகா கிராமங்களிலுள்ள நெசவாளர் சங்கங்களும் முக்கியஸ்தர்களும் தங்களுடைய அபிப்பிராயத்தை கீழ்கண்ட விலாசத்திற்கு தெரியப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விலாசம்:— சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்கபுரம் கைத்தறி நெசவாளர்கள் சங்கம், செவ்வாய்ப்பேட்டை சேலம்.

கே. கே. பூர்ணையா,
பி. தனபால்,
எஸ். வி. மாணிக்கம்.

முறையீடு

சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் சங்கக் காரியதரிசி சேலம் பி. தனபால், தமிழ் மாகாண நெசவாளர் சங்கக் காரியக் கமிட்டி அங்கத்தினர் பி. குமாரசாமி, ஆந்திரா ஆகியவர்களும் சென்னை மாகாண டெக்ஸ்டைல் கமிஷனர் அவர்களை நேரில் சென்னையில் கண்டு தமிழ், ஆந்திரா மாகாணங்களில் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு நூல் கிடைக்காமல் படும் கஷ்டங்கள், ஆங்காங்கு ஜில்லா ஆபீசர்கள் குறிப்பாக தமிழ் ஜில்லாக்களில் ஆகஸ்ட் கண்ட்ரோல் ஸ்கீம்படி தக்க நடவடிக்கை எடுக்காமல் இருப்பது பற்றியும் மெமோராண்டம் தயார் செய்து தரப்பட்டது. மற்றும் கைத்தறி டெக்ஸ்டைல் போர்டு சம்மந்தமாகவும் கேட்கப்பட்டது. எல்லாவற்றையும் கமிஷனர் கிரமமாகக் கேட்டு அவைகளுக்குப் பரிகாரமும், சேலம் சம்மந்தமாக தக்க நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதாகச் சொன்னார்.

நெசவாளர் மாநாடு

26-2-45 காஞ்சீபுரம் கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க நிர்வாகிகளின் கூட்டத்தில், நெசவுத் தொழிலாளர் குறைகளைப் போக்குவதற்காக ஒரு மாநாட்டைக் கூட்டுவதென தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டை மார்ச் மாதம் 13ந் தேதி காஞ்சீபுரத்தில் கூட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்ய ஒரு வரவேற்பு கமிட்டி அமைக்கப்பட்டது.

லால்குடி திருவள்ளுவர் கழக 4-வது ஆண்டு விழா தோழர் எம். திருவேங்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்களைச் சொல்லிக்கொண்டு உங்களை ஏய்த்து வாழ்க்கை நடத்துகிறார்கள்.

கடவுள் ஒழிக

திருவள்ளுவர் சொல்லி இருக்கிறார். உலகத்தில்,

"இரந்தும் உயிர்வாழ்தல்,
வேண்டின் பரந்து கெடுக
உலகு இயற்றியான்"
—என்று

இதற்கு என்ன அர்த்தம்? "உலகத்திலே மனிதன் இரந்து (மற்றவர்களின் உதவியால் மற்றவர்களைக் கெஞ்சி) வாழவேண்டிய நிலை இருக்குமானால் கடவுள் ஒழியவேண்டும்" என்று சொல்லி இருக்கிறார்.

ஆனால் ஒரு பார்ப்பனர் (உங்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு பிழைத்த பாரதி என்கிறவர்) சொன்னதைக் கவனியுங்கள்:

"தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாடி இருக்கிறார். இதை A. B. C. D. கூட அறியாத பொருளாதார சமதர்மவாதிகள் தங்கள் இலட்சியச்சொல்லாக வைத்துக்கொண்டு பாரதி பொதுவுடமைவாதி என்றும் தாங்கள் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லித்திரிந்து கொண்டு, உங்களை ஏமாற்றி உங்கள் முயற்சியையும் தப்பான வழியில்திருத்தி நல்ல தேவையான கொள்கையை பாழாக்குகிறார்கள். இந்தக்கூட்டம் காந்தியாரைவிட, காங்கரசாரைவிட, பிர்லா கூட்டத்தாரைவிட, 'தேசிய' பார்ப்பனர்களைவிட பொருளாதார சமுதாய சமத்துவத்துக்கு விரோதிகளாவார்கள். மற்றொரு கூட்டம் புராணக்கதைகளைச் சொல்லி இராமாயணத்தில் பெரிய புராணத்தில் நடராஜ தாண்டவத்தில் சமதர்மம் பொதுஉடமை இருக்கிறது என்று கூறி உங்களை ஏமாற்றி புராணப்பிரச்சாரம் செய்கிறார்கள். இவர்கள் யார் தெரியுமா? இவர்கள் செல்வவான்களுடையவும், மேல்ஜாதிக்காரர்களுடையவும், மதத்தலைவர்களுடையவும் லைசென்சு பெற்ற [illegible] அற்ற அடிமை கூலிகளாவார்கள். இவர்களை ஒழியுங்கள் முதலில்.

தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் உலகத்தை எதற்காக அழிப்பது, எப்படி அழிக்க முடியும்? உலகத்தில் உணவு இல்லையா? உலகத்தை அழிப்பது என்றால் துறவி ஆகிவிடுவதா?

உலகம் அழிக்கப்படுவது என்றால் தானும் அழிந்துதானே ஆகவேண்டும்? எனவே இதில் பித்தலாட்டமோ, முட்டாள்தனமோ இல்லாமல் அறிவுடைமையோ, நாணயமோ இருக்கிறதா?

நாணயமோ, அறிவோ இருந்திருந்தால் வள்ளுவர் சொன்னது போல்,

'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் (இரந்தோ மானத்தைவிட்டோ பிழைக்கவேண்டுமானால்) கடவுளை அழித்திடுவோம்" என்றல்லவா பாடி இருக்கவேண்டும். நாஸ்திகன் என்று பிறர் சொன்னால்தான் சொல்லிவிட்டுப் போகட்டுமே! திருவள்ளுவர் நாஸ்திகனானால் இவரும் நாஸ்திகனாகட்டுமே. நாஸ்திகத்திற்குப் பயந்த மனிதன் மற்ற எந்தக் காரியத்திற்குப் பயன்படமுடியும்?

தோழர்களே, உங்களுக்கு அதாவது ஜாதியில் கீழ்ஜாதி, வாழ்வில் கஷ்ட ஜீவனம், அன்றாடு நித்திய தரித்திரம் (ஏழ்மை), உங்களுக்கு மதம் என்ன? கடவுள் என்ன? மதம், கடவுள் எல்லாம் வயிறுநிறைந்தவனுக்கும், பித்தலாட்டக்காரனுக்கும், போக்கைச் சோம்பேறிக்குமல்லவா வேண்டும்.

உங்களுக்கு கண்டிப்பாக இப்படிப்பட்ட மதமும்கடவுளும் வேண்டவே வேண்டாம். அப்பொழுதுதான் அன்பு மதமும், சமத்துவக் கடவுளும் இருந்தால் தோன்றும். அது இன்று வேறு யாருக்கு இருந்தாலும் உங்களைப்பொருத்தவரை இல்லை. இல்லாததை கட்டிக்கொண்டு அழுது ஈனநிலைக்கு ஆளாகாதீர்கள்.

எல்லாம் கடவுள்செயல், எங்கும் கடவுள் ஆணை நடக்கிறது என்பவர்களிடத்தில் நமக்குப் பேச்சில்லை. ஆனால், அதையும் சொல்லிக்கொண்டு உங்களையும் ஈடேற்றுவதாக வருகிறார்களே, அந்தப் புரட்டர்களுக்கு ஏமாந்துவிடாதீர்கள் என்பதற்கு ஆகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

ஈரோடு அனாதை மாணவர் ஹாஸ்டல்

டி ஹாஸ்டலின் 3-வது ஆண்டுவிழா 11-3-45ல் தோழர் ஆர். வி. என். நாயுடு ஜாய்ஸ்லண்டு அம்மையாரின் தலைமையில் நடைபெறும். பல தோழர்கள் பேசுவார்கள்.

பொற்கொடி

திருத்துறைப்பூண்டி தமிழ் நாடக நிலையத்தினரால் 11-3-45 ஞாயிறு இரவு 10-45 மணிக்கு "பொற்கொடி" என்ற சமூக சீர்திருத்த நாடகம் நடைபெறும். விதவையர் துயரம், இந்துமதக் கொடுமை, மடாதிபதிகளின் அடாத செயல்கள், கலைவளர்ப்போரின் புரட்டுகள், சோதிடத் தீங்குகள் ஆகிய சீர்திருத்தக் கொள்கைகள் நிறைந்த இந்நாடகத்திற்கு கவிஞர் பாரதிதாசன் மற்றும் பல இயக்கத் தோழர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

மணமகள் தேவை

சுமார் ரூ. 2000 சொத்துடையவனும், ஹையர்கிரேடு போதனாமுறையில் தேர்ச்சிபெற்று மாதம் ரூ 25 சம்பாதிப்பவருமான ரெட்டியார் வகுப்பைச்சேர்ந்த 24-வயதுடையவருக்கு மணமகள் தேவை, எம்மதத்தினரானாலும் சரியே. மணமகள் 16-வயதுடைய நற்குணம்; தன்மான உணர்ச்சி உள்ளவராக இருக்கவேண்டும். மத்தியதர குடும்ப வகுப்பைச் சேர்ந்தவராகவும், உபாத்தினித் தொழிலில் இருந்தால் நலம். அல்லது அதற்கு சமமான படிப்பும், ஊதியம் உள்ளவராக இருத்தல் வேண்டும். திருமணம் சீர்திருத்த முறைப்படி ரிஜிஸ்டர் திருமணமாக நடைபெறல் வேண்டும். விருப்பமுள்ளோர் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். கடிதப் போக்குவரத்து பத்திரமாக வைக்கப்படும்.

Y—C/o செ. நந்தகோபால்,
கெ. T. 24 புதுவை வீதி,
பீமநாயக்கன் தோப்பு,
விழுப்புரம்.

ஆகவே உங்களுடைய இலட்சியச் சொல்லாக இதைக் கொள்ளுங்கள். என்னவென்றால்,

மனித சமுதாயம் ஒன்றாக வேண்டுமானால் மதம் ஒழிய வேண்டும்!

பொருளாதாரம்ஒன்றாகவேண்டுமானால்கடவுள் ஒழியவேண்டும்!

திராவிடக் கழகங்கள்

திருப்புகலூர்: 14-1-45ந் தேதி தோழர் துரைசாமி இல்லத்தில், அன்னார் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கூட்டத்தில், "பெரியாரும் அவரது செயலும்" என்பதுபற்றி பலர் பேசினார்கள்.

வாழ்குடை: 14-1-45-ந் தேதி சென்னை தோழர் கே. ஜி. வெங்கடேசன் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் திராவிட கழகத்திற்குத் தோழர்கள் வி. என். கிருஷ்ணசாமி தலைவராகவும், கே. முனிசாமி உபதலைவராகவும், வி. கிருஷ்ண மூர்த்தி செயலாளராகவும், வி. எல்லப்பன் உதவிச் செயலாளராகவும், எம். தங்கவேலு உடையார் பொருளாளராகவும், 7 பேர் கழக உறுப்பினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

சீர்காழி: 14-145-ல் பஞ்சாயத்து போர்டு உபதலைவர் தோழர் எஸ். ஜி. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகம் திறக்கப்பட்டது. தோழர் வில்லாளன் பெரியார் படத்தைத் திறந்து வைத்தார். புலவர் மாணிக்கம் 'திராவிடர் கழகம்' என்பது பற்றிப் பேசினார். மற்றும் தோழர்கள் ஆர். எம். வி. ஆர். சமச்சிவாயம், என். ராசசாமி, என். என். சம்பந்தம் ஆகியோர் பேசினர்.

சம்புவராயநல்லூர்: 4-1-45-ந் தேதி தோழர் என். ஆர். மாணிக்க முதலியார் தலைமையில் நடந்த திராவிடர் கழகக் கூட்டத்தில் தோழர் சி. டி. நாயகம் அவர்களின் மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருப்பூந்துருத்தி: 29-12-44-ல் தோழர் பிச்சையா தலைமையில் நடந்த கூட்டத்தில் "திருப்பூந்துருத்தி ஆதிதிராவிட வாலிபர் கழகம்" என இருப்பதை "திருப்பூந்துருத்தி திராவிடர் கழகம்" என்று திருத்தியமைக்கப்பட்டது.

16-1-44-ந் தேதி தோழர் எஸ். கோதண்டராமன் தலைமையில் கண்டியூர் திராவிடர் கழகம் திறந்து வைக்கப்பட்டது.

தோழர் அஜீஸ் கொடியேற்றி வைத்தார். பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

கன்னப்பிரம்பூர்: தோழர் வீரசாமி பி. ஏ., அவர்கள் தலைமையில் 'திராவிட வாலிபர் கழக'த்தை தோழர் அடைக்கலம் துவக்கி வைத்தார். தோழர் என். சுந்தரம் 'திராவிட மக்களின் நிலை' என்பது பற்றிப் பேசினார். தோழர் செ. தெ. நாயகம் அவர்களின் மறைவுக்கு அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

மேலக்கற்கண்டார் கோட்டை: 7-1-45 ந் தேதி தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், தோழர்கள் குடந்தை முகமது இப்ராகிம், அ. மா. பெரியசாமி, டி. சி. என். மணி முதலானவர்கள் திராவிடர் கழகத்தில் உறுப்பினராகச் சேருவதின் அவசியத்தை விளக்கினார்கள்.

குடந்தை: 12-1-45-உ தோழர் திருஞானம் தலைமையில் நடந்த திராவிட மாணவர் கழகக் கூட்டத்தில் தோழர் எ. பி. ஜெயராமன் "இசையும் மொழியும்" என்பது பற்றிப் பேசினார். அமீரலி, சுந்தரமூர்த்தி முதலியோரும் பின் பேசினார்கள்.

ஓமலூர் தாலுகா திராவிடர் கழகத்தின் ஆதரவில் மேலச்சேரியில் 3-1-45-ந் தேதி தோழர் தெ. வெ. கதிரியார் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ப. கண்ணன், அண்ணாமலை பல்கலைக் கழகம் க. தியாகராசன், கரந்தை அறிவுடை நம்பி, கடலூர் இளவழகன், 10 வயது வீரமணி முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

வனவாசி திராவிடர் கழகச் சார்பில் 2-1-45-ந் தேதி தோழர் அ. சின்னப்பன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ப. கண்ணன், கடலூர் இளவழகன், 10 வயது வீரமணி, அண்ணாமலை நகர் தியாகராசன், கரந்தை அறிவுடை நம்பி முதலியோர் பேசினார்கள்.

சலகண்டபுரம் திராவிடர் கழக சார்பில் 1-1-45-ந் தேதி தோழர் ப. கண்ணன் தலைமையில் நடந்த கூட்டத்தில், தோழர்கள் இளவழகன், வீரமணி, அறிவுடைநம்பி, தியாகராசன்முதலியோர்பேசினர்.

வேலப்பாளையம் (கரூர்) திராவிடர் கழகத்தின் பொதுக் கூட்டம் தோழர் கே. வையாபுரி தலைமையில் 26-1-45-ந் தேதி நடைபெற்றது. அதுசமயம், "சர் ஏ.டி. பன்னீர்செல்வம் மருத்துவக் கழக"த்தை "திராவிடர்கழகம்" என்று பெயர் மாற்றுவதென்றும், கிராமத்தின் சுகாதார வசதியைப் பொருத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆத்தக்குடி திராவிடர் கழகத்தின் ஆதரவில் 29-1-45-ஆம் தேதி தோழர் பி. எஸ். பி. கே. ஜெயராஜபாண்டியன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், தோழர்கள் என். ஜீவரத்தினம், சி. வி. சின்னராசு ஆகியவர்கள் விரிவுரையாற்றினார்கள்.

சுவாமிமலை திராவிடர் கழக ஆரம்பக்கூட்டம் 14-1-45ந் தேதி தோழர் ச. சின்னப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. டி. நாயகம் அவர்களின் மறைவு பற்றி அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. தோழர்கள் பெ. இரத்தினம் தலைவராகவும், ப. கந்தசாமி, அ. நாகமுத்து உபதலைவர்களாகவும், ச. சின்னையா அமைச்சராகவும், வி. கோதண்டபாணி, கு. சிவானந்தம் கட்டுக்காரியதரிசிகளாகவும், மா. வேணுகோபாலன் விளம்பர அதிகாரியாகவும் இரா. நாராயணசாமி பொருளாளராகவும், 5 பேர் நிர்வாக அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தங்குடி பிரின்ஸ் ஆப் வேல்ஸ் 6வது ஆண்டு விழா தோழர் எம். ஆண்டி தலைமையில் 1-1-45ந் தேதி கொண்டாடப்பட்டது.

தோழர் ஆண்டி தலைமையில், ஜனவரி 17, 18-ந் தேதிகளில் குருவாடு, ஸ்ரீ வைகுண்டம், காயல்பட்டணம் முதலிய ஊர்களில் பிரச்சாரம் செய்தனர்.

* *

அத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்க தொண்டர்படையினர் ஜனவரி 14, 15ந் தேதிகளில் பகுதிபகுதியாக பல கிராமங்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்தனர்.

o o

அத்தக்குடி வ. பு. அ. சௌந்திர பாண்டியன் தமிழர் சமதர்ம சங்கத்தின் 5-வது ஆண்டு விழா 25-12-44-ந் தேதி தோழர் ஏ. அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. டி. நாயகம் அவர்களின் மறைவுக்கு வருந்துவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

புவனகிரியைச் சேர்ந்த கீரைப்பாளையம் தோழர் வி. சம்பந்தம் தலைமையில் பெரியார் ஆண்டு 66 நவம்பர் 12-ந் தேதி நடைபெற்ற தோழர்கள் தங்கவேல்—அஞ்சலை திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்காக ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

o o

31-12-44-ல் சிப்பளாப்புத்தூரில் தோழர் எஸ். கே. ஓ. அவர்களின் குழந்தைகள் முத்துராசு, வசந்தா ஆகியவர்களுக்கு தோழர் எம். நடராஜன்-எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் காது குத்து விழா நடைபெற்றது. சீர்திருத்த சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

o o

மேட்டூர் [illegible] ஸ்தாபனத்தில் வேலை பார்த்து வரும் தோழர் துரைசாமியால் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

o o

வடவேற்குடி தோழர் வி. எஸ். சுந்தரசிவம் பிள்ளை அவர்களின் கொழுந்தியார் தோழர் ஆர். சின்னம்மாள் காலமானதை முன்னிட்டு 22-12-44-ஆந் தேதி தோழர் பூதமங்கலம் மலைபெருமாள் பிள்ளை தலைமையில் இறுதிச்சடங்கு நடந்தது. இதை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

o o

25-12-44-ந் தேதி விருத்தாசலம் திராவிடர் கழகக் கூட்டத்தில் தோழர் எஸ். கைசாத் இஸ்மாயில் தலைமையில் மௌலானா மகமதலி ஜின்னாவின் 69வது பிறந்ததின விழா கொண்டாடப்பட்டது.

o o

நாகப்பட்டணம் திராவிட நடிகர் கழகக்கூட்டம் 11-2-45ந் தேதி தோழர் ஆர். வி. கோபாலன் தலைமையில் நடைபெற்றது. தோழர் பி. கே. பக்கிரிசாமியின் வாழ்க்கைத் துணைவியார் வேதம் அம்மையார் இயற்கையெய்தியதற்கு வருந்துவதாக தீர்மானிக்கப்பட்டது. காலியான காரியதரிசி பதவிக்கு தோழர் என். சஞ்சீவி தெரிந்தெடுக்கப்பட்டார்.

* *

பொன்னேரி ஆதிதிராவிட இளைஞர் கழகத்தின் சார்பில் தோழர் சி. தங்கராஜ் தலைமையில் 4-2-45ந்தேதி நடந்த கூட்டத்தில் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

கரூர் முத்தராஜுல சங்கத்தின்கூட்டம் தோழர் பசுபதி முத்தராஜா தலைமையில் 12-2-45ந்தேதி நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

காஞ்சிபுரம் பஞ்சிபேட்டைசேரி திராவிடர் கழகம் 5-1-45-ந் தேதி திறக்கப்பட்டது. தோழர் ஜி. எஸ். மணி தலைவரும் காரியதரிசியுமாகவும் மற்ற நிர்வாகிகளும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

பொன்மலை மருத்துவர் சங்கப் பொதுக் கூட்டம் 12-2-45-ஆந் தேதி தோழர் ப. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சீர்திருத்தம் என்பது பற்றிப் பேசினார்கள்.

* *

14-2-45-ந் தேதி தோழர் எம். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற மோகனூர் தேவேந்திர இளைஞர் சங்கக் கூட்டத்தில் தங்களுடைய குறைகளை மோகனூர் பஞ்சாயத்து போர்டார் நீக்காமலிருந்து வருவதைக் குறித்து வருந்துவதாகவும் தோழர் எம். பி. பெரியசாமி எம். எல். ஏ., அவர்களை தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

* *

12-2-45-ந் தேதி நடைபெற்ற திருச்சி ஜில்லா மருத்துவர் சங்கத்தின் மாதாந்திரப் பொதுக் கூட்டத்தில் பல தோழர்கள் பேசினார்கள். மேலபுதூர் மருத்துவர் இறந்ததற்கு வருந்துவதாக ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஷை சங்கத்தின் ஆதரவில் "[illegible] அல்லது கைம்பெண் கொடுமை" என்ற நாடகம் 16-2-45-ந் தேதி முதல் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

o o

நெல்லை மாவட்ட கருங்குளம் மேலப்பாளையம் பெரியார் புத்துணர்ச்சி இளைஞர் கழகத்தின் கூட்டம் 8-1-45 இரவு 8-மணிக்கு தோழர் ஏ. எஸ். கணபதி தலைமையில் நடந்தது. தோழர்கள் பி. சம்பத்தும், கே. எஸ். சண்முகம் முதலியவர்கள் பேசினார்கள். சி. டி. நாயகம் அவர்கள் மறைவிற்கு வருந்தியும் பண உதவிசெய்த பம்பாய் திராவிட தமிழ்நாடு பகுத்தறிவு நிலையத்தாரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

o o

வடசென்னை சௌந்தரபாண்டியன் வாலிபர் சங்கக்கூட்டம் 27-1-45ல் தோழர் வி. டி. பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. டி. நாயகம், சென்னை எஸ். சம்பந்தன் ஆகியவர்களுடைய மறைவு குறித்து அநுதாபத்தீர்மானம் நிறைவேறியது.

o o

குடந்தை சர். பி. தியாகராயர் செந்தமிழ் படிப்பகத்தின் எட்டாவது நிறைவு விழா மிகச் சிறப்பாக 28-1-45 மாலை 6-மணிக்குத் தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் நடந்தது. தோழர்கள் கே. கல்யாணசுந்தரம், சேலம்-வேலூர் கண்டர் உயர்நிலைப்பள்ளித் தலைமை தமிழாசிரியர் புலவர் பொன்னம்பலனார், கோ. சி. பெரியசாமி, கே. கே. நீலமேகம் ஆகியோர் பேசிய பின் இரவு 11மணிக்கு நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

o o

அருப்புக்கோட்டை தியாகராயர் வாலிபர் சங்கக் கூட்டம் அதன் கட்டிடத்தில் கூடியது.

தோழர்கள் சி. டி. நாயகத்துடையவும், ஆர். மாரியப்பன் அவர்களுடையவும் மறைவு குறித்துத் தீர்மானம் நிறைவேறியது. சங்கத்தின் சந்தா ஆண்டு ஒன்றுக்கு ரூ. 11 எனத் திருத்தப்பட்டது.

o o

பொன்னேரி தாலுகா ஆதிதிராவிட மாணவர் விடுதியில் தோழர் பி. எம். வேலாயுதபாணி தலைமையில் பொன்னேரி தாலுகா ஆதிதிராவிட வாலிபர் கழக ஆலோசனைக் குழு 4-2-45-ல் கூடியது. தோழர் சி. தங்கராஜ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வடசெங்கற்பட்டு ஜில்லா ஆதிதிராவிடர் மாநாடு 25-3-45-ல் பொன்னேரியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

o o

[illegible]புரி தமிழர் கழகத்தில் 2-2-45-ல் தமிழ்த் திருநாள் தோழர் வி. சு. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ. வை. இராமநாதன், சு. குடியரசன், க. நாகராஜன், கே. ஞானசுந்தரம் ஆகியோர் பேசினார்கள்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.